



ஓலை 60 | ஓசை 180 | பிப்ரவரி 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கிய பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

மனத்து அளவில் குற்றம் இல்லாதவனாய் ஆகுக.
அறம் என்பது அவ்வளவே; பிற வார்த்தை நடிப்பும்,
வாழ்க்கை வேடங்களுக்கும் மற்றவர்
அறியச் செய்யப்படும் ஆடம்பரங்களே.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிர்வாகக் குழு

**கு.செல்வமுத்துகுமரன்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா & அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர், டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# இயற்கையைக் காப்போம் இனி

பா வகை : வஞ்சி மண்டிலம்

இயங்கிடும் இயற்கையில் எங்கும்
வியப்புகள் விரிந்துதான் வீசும்
இயல்புகள் அடையுமா ஏற்றம்
உயர்ந்திட வேண்டுமே ஒட்பம்

ஆசிலா உலகையும் ஆங்கே
மாசிலா இடமென மாற்று
ஆசிகள் தந்திடும் அன்னை
நேசமே போற்றிடு நெஞ்சே

மண்ணையும் நீரையும் மாண்பாய்
கண்களாய் போற்றிடு காத்தே
உண்மையில் இயற்கையே ஊற்று
வெண்மனம் கொண்டநல் வேரே



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயம்புத்தூர்

# தன்முனைக் கவிதை அந்தாதி

விடாது துடிக்கும் இதயம்
அடாது புலம்புகிறது
நடிக்கும் அவனை
நொடியேனும் மறந்துவிடேன்

மறந்து விட எத்தனிக்கிறது
புரிதலான புத்தி
விடாது துரத்துகிறது
நினைவுகளின் சவ்வூடுபரவல்

பரவலின் வெளிச்சத்தில்
திசைகளைத் தேடுகிறது
விசையறியாது தழுவிய
நேசப் பெருவெளி

பெருவெளியில் அங்கும்
இங்குமாய் உழல்கின்றன
டோடோ பறவைகளின்
உதிர்ந்த இறகுகள்

இறகுகளின் வருடலில்
சிலிர்த்திடும் வனப்பேச்சி
சுற்றிலும் தழைக்கிறது
நேசப் பெருங்காடு

பெருங்காட்டைச் சுழற்றும்
பேராண்மை சுவாசம்
தன்னுள்ளே மூழ்கடிக்கும்
தண்மையின் வாசம்



வாசமிகு மலர்களைச்
சூடிக் கொண்டிருக்கிறாள்
இடை தாங்குமோ
பதறுகிறது மனது

மனக் காட்டில்
முளைக்கும் பெருமரங்கள்
துளிர்க்கும் ஒவ்வொரு இலையிலும்
உன் பெயர்

பெயரிட்டு அழைக்கிறாய்
சிலிர்த்து அடங்குகிறது
இரத்த நாளங்களில்
குருதிக் கோளங்கள்

கோளங்களின் நகர்வில்
காலக்கோட்டின் எல்லைகள்
உயிர்த்தலும், மரித்தலும்
நடந்தேறுகிறது விடாது

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு,பட்டாபிராம்

# பழமொன்ரியுக்கள்

மூத்தது மோழை
இளையது காளை
சொத்துக்காக ஜல்லிக்கட்டு

பெற்ற மனம் கல்லு
பிள்ளை மனம் பித்து
தொலைகாட்சி தொடர் மாமியார்கள்




மூத்தோர் சொல்
யப்பா விடமாய்
கைபேசிக் குழந்தைகள்

பெருமாள் இருக்கிறார்
திருநாளும் வந்து கொண்டுதான்
செலவுக்குத்தான் பிச்சை

மலிந்த சரக்குகள்
கடைத் தெருவுக்கு நிச்சயம்
அரசியலெனும் போதை

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,பிச்சாண்டார் கோவில்

# அருவி

நீள் கோடு
வளைவு
வட்டம்
சுழி
அனைத்து
வடிவங்களும்
வீழ்ந்து
வீழ்ந்து
பணியும்
உயரத்தில்
தோற்கின்றன



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# பாரியன்பன் நாகராஜன் கவிதை

## நானும் கடவுள்
******************

ஒரு பிரிவின்
கீழியங்கும் மானுடத்தை
மறுபடியும்
ஒரு புள்ளிக்குள்
நகர்த்தி நாடகமாடும்
பிரபஞ்சம்.
ஒரு துளிக்குள்
பிரசவித்த உயிருக்குள்
திணிந்திருக்கும் எண்ணற்ற
உறவு முடிச்சுகள்.
மேலும் கீழுமாய்ப் படர்ந்த
இவ்வெளியில்
ஜீவித்த நீயும்
அதே வெளியில் ஜீவித்த
மற்றொருவனும்
ஆட்டிவைக்கத்தான்
இவ்வுலகம்
இயங்குகிறதெனில்
என்னையும்
கடவுளென்றே
சொல்லிக் கொள்ளலாம்
நானும்.



## ஒரு வழி
***********

மாசத்துக்கு ஒருதரம்
தோலுரிச்சி
புதுச்சட்டை போட்டுக்குதாம்
நல்லபாம்பு.
ஏழைப் பிள்ளைங்க
எங்களுக்கு கோவணமும்
எஞ்சலியே.
அரசியல் வாதிகளே.
பாழாப்போன
எங்கள் நிலைமை மாற
வழிச் சொல்லுங்க
இல்ல -
நாங்க சாக
ஒருவழியாச்சும்
சொல்லிட்டுப் போங்க.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# தவமின்றி கிடைத்த வரமே!

தவமின்றி கிடைத்த
வரமே வாழ்க்கை.
தன்னம்பிக்கையோடு
நாளும் நன்றாய் உழைத்திடு.
அவமே காலத்தை
அலட்சியப் படுத்தாதே!
ஆசைகளை வேரறுத்து
அடக்கமாய் வாழ்ந்திடு.

உன் ஆற்றலை
உவந்தே உணர்ந்தறி.
வாழ்வது ஒருமுறை
வாழ்ந்திடு ஏற்றமாய்.
இரப்போர்க்கு உதவியே
இன்சொல் பேசிடு.
உழைத்திட உடலே
உரமாகி நிற்கும்.

உயிரது நிலைத்திட
வழியது கூறும்.
உவப்போடு வாழ்ந்திட
உள்ளத்தை அமைதியாக்கு.
உன்னுள் இறைவன்
உறங்கிக் கிடக்க
ஐம்புலன் ஒடுக்கி
ஐயவனைத் தேடிடு.



காழ்ப்புணர்ச்சி அகற்றி
காதலோடு இருந்திடு.
ஏற்றத்தாழ்வு பாராது
ஏழைகட்கு உதவிடு.
ஆக்கத்தைப் புதையலாக்கி
அழகு பார்க்காதே!
அல்லதை விலக்கியே
நல்லதைச் செய்திடு.

ஆணவத்தோடு நாளும்
அலைந்து திரியாதே!
சினமது கொள்ளாது
சிரித்தே வாழ்ந்திடு.

கவிஞர் செ.கலைவாணி

# கோபம்

கோபம்
சில நேரங்களில்
கை மீறுவதில் தவறில்லை
ஆனால்
கோபத்திலும்
வார்த்தைகளில் கவனம் இருக்கட்டும்
கோபங்கள்
தணிந்து போனாலும்
வார்த்தைகளின்
வீரியம்
குறைந்து போவதில்லை




கவிஞர் கீர்த்தனா பு,திருப்பூர் மாவட்டம்

# இனியவளே

சிந்தைதனை திருடிய
சித்திர பூவிழியே
நிந்தைதனை மறந்து
நின்னையே சரணடைய
வந்தனை பாடியே
வான்மழையும் கொடுத்தேனே
இந்திரனை வென்று
இனியவளே உனக்காக

அன்பெனும் வலையில்
அகப்படும் காவியத்தை
இன்பமாய் அறிந்து
இசையில் நோக்கிட
துன்பமோ தெரியாத
துணையாக நீயிருக்க
தன்னையே மறந்தேனேடி
தனிமையில் என்னையே



விடைகள் கூறுகின்ற
விளையாட்டால் வெல்லவா
தடைகள் காணாத
தமிழால் ஆளவா
உடைவாளை ஏந்தியே
உயிர்களை காக்கவா
இடைவிடாத வரவாலே
இலக்கணமோ படைக்கவா

கவிஞர் ப.வெங்கட்ரமணன்,குளித்தலை

# காதலர் தின பரிசு

எதார்த்த காதல் பரிசாக
எல்லோரும் கொண்டாடும் காதலர் தினமதிலே
எங்கள் அணுவில் வந்த அன்பு உயிரே
எந்தன் நகலாய் முக அழகில்

என்னவரின் குணமுனக்கு
எனை மா என்றழைத்த முதல் உயிர் நீ
எழிலகத்தின் முதல் வாரிசு நீ
எங்கும் நிறைந்திடுமே உன் குரலே



எல்லோருக்கும் நீ செல்லப்பிள்ளை நீ
எதார்த்தம் அறியா சிறு சிசு நீ
எதிர்த்து நின்றாலும் உன் தம்பியிடம்
எக்கச்சக்க அன்பை பொழிபவனே

எஞ்சிய வாழ்விற்கும் நிறைபாகம் நீ
எட்டுதிக்கும் பறந்திடுவாய்
எண்ணி வியக்கிறேனே உன் வளர்ச்சியை
எத்தனை வயதானாலும் அன்பிடம் நீ

எதிர்காலத்திலும் நீயே
எண் இரு பேரும் புகழும் பெற்றிடவாயே
எந்த ஒரு கலையிலும் வென்றிடுவாயே
எப்படி சொல்வேன் உன் பாசமதை

எய்து கட்டிடுமே உன் ஆசைப்பேச்சும்
எவ்வளவு நேரங்களில் மெச்சியிருக்கிறேன்
எள்ளளவும் தாங்கமாட்டாய் சுடுசொல்லும்
எழிலாக வாழவே பொறு என்பேன்

எத்தனை எத்தனை நான் பொறுப்பது என்பாய்
என்ன என்ன பாடம் சொல்லும் நிகழ் குரு நீ
எரிமலை சினமும் தனிந்தே போகும்
என் அழகு பெட்டக விழி நீரில்

எதிர்காலம் உனை சிறக்கவைக்கும்
எல்லாமே உன் வசம் கிட்டும்
எந்தன் இஷ்ட தெய்வமும்
எனக்கு மேல் உனக்கு துணையாக நிற்கும்

கவிஞர் நீலாசுபாஷ்,ஆக்கூர்

# சுமைகளைத் தாங்கும் சுமைதாங்கி நீயடி

தலைக்கனம் பிடிக்காத
தலைச்சுமைக்காரி.

தங்கத் தட்டில் தாங்க வேண்டிய
தன் குழந்தையை
தாங்கிச் செல்லும்
தயக்கமில்லா பெண்மணி.



செங்கல்லின் சுமையிலும்
செவ்வாயின் கடையிடையில்
செந்தாழை மலரின்
செந்தூரச் சிரிப்பில்.
செம்பவளமும் நாணுமடி

வைரத்தின் அடர்த்தியான
வைக்கப்போரின் இதயம்
வைத்தீஸ்வரனும் சொன்னாலும்
வையாமலே போகும்
வரிகளைச் சுமந்த
வண்ண மகளவள்.

கனவுகளைச் சுமக்கும்
கண்களோடே வாழ்க்கை
கனவுலகிலன்றி இவ்வுலகோடே
கடக்கின்ற வாழ்க்கைப் பயணம்.

மனதிலே உறுதி
மதியிலே மயக்கமின்மை
மையலிட்ட தோகையவள்
மறக்கவில்லை வாழ்வின் உண்மையை.

எப்படியோ எதிர்காலம்
எட்டாத தூரத்தில்
எட்டாக் கனியாய்
எகிறும் மாயக்கயிறாய்
எதிரே தெரிந்திடினும்.

எதிர் கொள்ளும்
எம்மண்ணின் தேவதையே.
என்றும் இதயங்களில் உதயமாகும்
எழிலான சுமைதாங்கி நீயடி.

கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# இமையசைவே ஏழிசையாய்

இளமையின் இராகமே
உதயத்தின் கீதமே
மெல்லிசைப் பாடலே
மென்மையான கூடலே
பாவையின் பார்வையில்
இமையசைவும் ஏழிசையானதே



உன்னுள் வீழ்ந்தே
உயிர்த்து எழுந்தேனே
இன்பத்தில் திளைத்து
இனிமையாய் களித்தேனே
முல்லைச்சரமே முழுமதியே
கன்னல் சுவையே

செந்தேனை செவ்விதழில்
நானருந்த வந்திடவோ
அழகுச் சிலையாய்
எண்ணத்தில் நிறைந்தாயே
மனதின் சுமையாவும்
சுகமானது உன்னாலே

காதல் காரிகையே
காமனின் துணையே
வானவில்லின் வண்ணமாய்
வட்டமிடும் சிறுபறவையே
மரங்கொத்தியாய் மனதை
துளைத்திட்ட இளையவளே

ஆர்ப்பரிக்கும் உள்ளத்தில்
ஆனந்தம் தருபவளே
மகரந்தச் சேர்க்கையில்
நெஞ்சமும் நெகிழ்வானதே
பூவின் இதழ்களாய்
பருவமும் பூரிப்பானதே

அசைந்தாடும் பூங்கொடியே
தஞ்சமானேன் உன்னிடமே.

கவிஞர் பெ.வெங்கட லட்சுமி காந்தன்,விருதுநகர்

# பிரசவம் ஆகாத

எனது நேசம்
காற்றில் கலந்த
வாசனை போலானது

எனது நேசம்
நதியில் கரைந்த
ஈரம் போலானது

பெருமரம் தாங்கும்
நிலம் போலவே
எனது நேசம்

அலை கடலின்
ஆழமாய்
எனது நேசம்

பெருவனத்தில்
வசந்தகால
அரும்புதலானது
எனது நேசம்

தீக்குள்ளிருக்கும்
மஞ்சளின் தேடலாய்
எனது நேசம்



ஆகாயம்
பூசிக் கொள்ளும்
நீலமாய் என் நேசம்

மழையின் துளிகளில்
ஒளிந்திருக்கும் பிரளயமாய்
எனது நேசம்

நேசத்தில்
நீயும் நானும்
ஒன்றே அல்ல

ஆயினும் என்ன?

பிரசவமே ஆகாத
கர்ப்பமாய்
அது
வளர்ந்துகொண்டே
இருக்கும்
காலத்தின் கனிதலை
எதிர்பார்த்து!

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# சந்தோஷ வெளிப்பாடுகள்

மனதை மென்மையாக்கி
முகத்தில் புன்னகையை சூடி
சந்தோஷத்தை வெளிப்படுத்த வேண்டும்
என்பதையே ஒரு குறிக்கோளாக
வைத்திருக்க எண்ணுகிறேன்!

தீபச் சுடரினின்றும் சுடர் பரவி
வெளிச்சத்தை ஒளிர்ப்பது போல்
எனக்கான சந்தோஷ வெளிப்பாட்டை
சந்தோஷத்தை வெளிப்படுத்துபவர்களிடமிருந்தே
பெற்றுக் கொள்கிறேன் நன்றியுடன்!

இயல்பாய் ஒளிரும் என்
சந்தோஷ வெளிப்பாட்டைக் கண்டு
அதை சந்தோஷச் சுடரென
ஏந்திக் கொண்டு செல்பவர்களுக்கும்
நிலைத்திருக்கட்டும்
சந்தோஷம்



கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# என்னைப் பற்றி நான்

நீ நீயாக
எனவே நீ நீயாக இரு !
கங்கை நீர் புனிதம் தான்.
அதனால் கிணற்று நீர் வீண் என்று அர்த்தமில்லை.
தாகத்தில் தவிப்பவருக்கு
கங்கையாயிருந்தால் என்ன ?
கிணறாகயிருந்தால் என்ன ?
நீ நீயாக இரு!
காகம் மயில் போல் அழகில்லை தான்.
ஆனாலும் படையல் என்னவோ காக்கைக்குத்தான் !
நீ நீயாக இரு!
நாய்க்கு சிங்கம் போல் வீரமில்லை தான்.
ஆனாலும் நன்றி என்னவோ நாய்க்குத் தான்!



நீ நீயாக இரு!
பட்டு போல் பருத்தி இல்லை தான்.
ஆனாலும் வெய்யிலுக்கு சுகமென்னவோ பருத்திதான்!
நீ நீயாக இரு!
ஆகாசம் போல் பூமி இல்லைதான்.
ஆனாலும் தாங்குவதற்கு இருப்பது பூமிதான்!
நீ நீயாக இரு!
நேற்று போல் இன்றில்லை.
இன்று போல் நாளையில்லை.
அதனால் ஒவ்வொன்றும் அற்புதம்தான்!
எனவே நீ நீயாக இரு!

நீ நீயாக இரு!
மகிழ்ச்சியான காலை வணக்கம்.
நான் நானாக இருக்கும் பொழுது
பல மாற்றங்களை பார்க்கிறேன்!
அதில் எனக்கு சந்தோஷமும் சமாதானமும் கிடைக்கிறது,
நீ நீயாகவே இரு!
நான் நானாக இருக்கும் போது
பல மாற்றங்களை காண்கிறேன்
அது எனக்கு தன்னம்பிக்கையும்
இன்னும் ஒரு முன்னேற்றத்தையும் கொடுக்கிறது
உன்னால் முடியும் உன்னால் மட்டுமே முடியும்
நான் நானாக இருக்கும் பொழுது என்பதை உணர்கிறேன்.

கவிஞர் ஜெ.தேவி ராஜசேகர்,சென்னை

# பெண்

பெண்ணவளின் அன்போ
மனதிற்கு குளிர்ச்சியாம்

பெண்ணவளின் கருணையோ
அப்பழுக்கில்லா நிரந்தரமாம்

பெண்ணவளின் கண்டிப்போ
நன்னடத்தையின் வெளிப்பாடாம்

பெண்ணவளின் கம்பீரமோ
நேர்மையின் பிறப்பிடமாம்



பெண்ணவளின் வெற்றியோ
வலிகளூடேயான போராட்டமாம்

பெண்ணவளின் உழைப்போ
நீடித்திருக்கும் செல்வமாம்

பெண்ணவளின் சுறுசுறுப்பால்
தோல்வியும் தோற்றிடுமாம்

பெண்ணவளின் விடாமுயற்சியால்
வெற்றிக்கனியும் அவளிடமாம்

பகைவனைக் கண்டிட்டால்
பெண்ணவளும் பெருந்தீயாவாள்

பிறர் நலனுக்காக தன்னை
மாய்த்திடவும் தயங்காள்.

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# தனிமை

இருள் தழுவும் இரவு
எழுந்த வரும் நிலவு
நகரம்தான
தெளிவற்ற பாதை
பதற்றமான பயண்ம்
இருள் கிழிந்து வரும்
மன ஒளி
நிலவை பிரகதி பலிக்கும்
பாதையில்
தெளிவு
நிதானமாய் பயணம்



கவிஞர் ஸ்ரீவள்ளி,கோவை

# நினைவலைகள்

நினைவுகளின் அடுக்குகளில் நீந்திப் பார்க்கிறேன்!
கடற்கரையில் கால் நனைத்து ஆடிய காலங்களும்!
சவ்வு மிட்டாய் கலர்கலராய்
கடிகாரமாய், மயில்களாய்
கைகளில் புது வடிவம் பல எடுப்பதும்!
கல்லா மண்ணா என்று
கால் தரையில் பாவாமல்
கள்ளமின்றி விளையாடியதும்!
மிதிவண்டியில் ஊர் சுற்றித் திரிந்ததும்!
குளக்கரையில் அமர்ந்து
கல் வீசி வட்டவட்டமாய்
எழும் சலனங்களை சந்தோஷமாய் ரசித்ததும்!
பெருமாள் கோயிலுக்கு
மார்கழி மாதக் குளிரில் பஜனைக்குப் போய்
கைப்பொறுக்க முடியாமல்
சுடச்சுட பொங்கல் சாப்பிட்டதும்!
தேர் திருவிழாவில் ராட்டினம் சுற்றியதும்!
மரச்சொப்பு சாமான் வாங்கியதும்!
மரமேறி விளையாடியதும்!
விளக்கு வைக்கும் நேரம் வரை
தெருவில் சுற்றித் திரிந்ததும்!
பாட்டி நிலாச்சோறு ஊட்டியதும்!
தாத்தாவிடம் கதை கேட்டதும்!
கவலை அறியாமல் சிறுப்பிள்ளைத்தனம்
மாறாமல் சுதந்திரமாய் சிரித்து விளையாடியதும்!
இக்காலப் பிள்ளைகள் இழந்து விட்ட சொர்க்கம்!
இளமைக்கால இனிமையான
நினைவுகள் பரவசத்தில் ஆழ்த்துதே!
மீண்டும் குழந்தையாய்
மாறிட மனம் ஏங்குதே!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# உழைப்பாளி

தன்மானத்தோடு வாழ்ந்து வரும் உழைப்பாளி
சொந்தக் காலில் நிற்கும் உழைப்பாளி
வியர்வை சிந்தி உழைக்கும் உழைப்பாளி
நோய் இல்லாமல் வாழும் உழைப்பாளி
பாரத்தை தானே சுமக்கும் உழைப்பாளி
யாரையும் எதிர் பார்க்காத உழைப்பாளி
கவலைகள் இல்லாமல் வாழும் உழைப்பாளி
சுறுசுறுப்பாய் ஓடி திரியும் உழைப்பாளி
தன் நலத்துக்காக வாழாத உழைப்பாளி
முதலாளிக்காக நாளும் உழைக்கும் உழைப்பாளி
நன்றி கடனைக் காட்டும் உழைப்பாளி
உழைப்பாளி இல்லையெனில் உயர்வு இல்லை



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# எங்கே என்அன்பே?

உனகாக எழுதிய வரிகள்
காயும்முன் காணாது மறைந்தாய் அன்பே
என்ன பிழை செய்தேன் நான் அன்பே
மறைமுக தாக்கம் ஏனடா கண்ணா
ஒருமுறை சொல்வாயோ திருத்தம் கொள்வேனடா நானே
மறுமுறை உன்னை இழக்காது நானிருப்பேனடா
பொய்த்து போகிறது விடியல்
அஸ்தமிக்கும் நாள் பொழுதை காணும் போது
சிணுங்கல்தானடா முடிகிறது
எண்ணமெல்லாம் நீ இருக்க வண்ணமாகும்
நாளை நான் எதிர்ப்பார்க்க
ஏமாற்றி தொலைகிறாயடா
வந்து விடேன் எனதாசை கேட்டு விடேன்
உன தாசை பொறுந்தி நானும் வாழணும்
இறுதி மூச்சு வரை
கண்டதும் காதல் என்றது எது வரையோ
எனக்கு வேண்டும் நீ உறுதி என்ற கணவனாய்
எனது கடைசி நொடி வரையே
வாழ்வை வாழ வேண்டும் நான் உன்னோடு பல காலம்
அண்ணல் நபி அன்னை கதீஜா காதலைப்போலவே
பாத்திமா நாயகி அலிரலியார் காதலைப்போல
நானும் காதல் கொடுக்க காத்திருக்கிறேன்
இறைவன் அருளை எதிர் பார்த்தவளாக
தாமதிக்கும் யாவும் நிலைபெறும் என்றே
நாழிகை நகர்த்தி நேரம் ஒதிக்கி வேண்டுகிறேன்
பிழையான பொருத்தம் வந்து விட வேண்டாம் என்றே
கரையும் நிமிடத்தோடு என் ஆர்ப்பாட்ட
எதிர்ப்பார்ப்பும் தொலையுதே
மனித வஞ்சம் நிறை சொல் வந்து வீழுதே
நெஞ்சம் துடி துடித்தழுதே
வீராவேசம் இட தான் நா துள்ளுதே



கவிஞர் சஹ்னாஸ் பேகம்,புத்தளம்(இலங்கை)

# சிலப்பதிகாரம் (முப்பத்தி ஒன்று)

30. வரம் தரும் காதை .

1. சேரன் மணிமேகலை பற்றி அறிதல் :
வட திசை மன்னர்கள் வணங்கிய வானமர் சேர மன்னன்
கடவுளாக வழிபட கண்ணகிக்கு கோயில் காட்டினான
விடை தெரியாத கேள்வி ஒன்றை தேவந்தியிடம் கேட்டான்
"அட , யார் அவள் மணிமேகலை? விவரம் சொல்வாய்" என்றான்
"அழகு பதுமை அவள், கண்டோர் மனததில் அலைபாயும் அவள்
பழகு தமிழில் ஒழுக்க நெறிகளில் வளர்ந்தவள், மாதவி மகள்
விழிகளில் கருணை அறம் தெரிய பார்த்தவர் ஏங்கி நின்றனர்
வழி வழிவந்த குல முறையில் ஒரு பட்சி பறந்ததால் கலங்கினர் .

2. தேவந்தி மேலும் உரைத்தல்:
ஆடல் மகள் ஒருத்தியை இழந்துவிட்டோம் என வருந்தினர் மக்கள்
கூடல் மேடைகள் வெறிச்சோடிப் போனது சோகமாயினர் அனைவரும்
தேடலில் கிடைக்காத ஆணி முத்து இல்லாத மகுடத்திற்கு மதிப்பேது ?
மடத்தில் வாசம் செய்யும் மகள் துறவு மாதவி விரும்பியது" என்றாள்

3. தேவந்தி மீது தெய்வம் எழுதல் :
பாசண்ட சாத்தான் தேவந்தி மீது பொருந்தி கூறலானான்
நேசம் கொண்ட பக்தர்கள் கண்ணகி வழிபட வருகின்றனர்
பேசும் தெய்வமானவள் கும்பிடும் பக்தர்கள் குறை தீர்ப்பாள்
தேசம் காக்கும் அவள் தமிழர்களை காத்து நிற்கும் குலசாமி

4. மாடலன் கண்ணகி பெருமை சாற்றுதல் :
வேந்தே நின் தீமைகள் யாவும் கெடுவதாக, நின் புகழ் ஓங்குக
இந்த மலை உச்சியில் சுனை நீர், நிலம் வற்றினாலும் வற்றாது
அந்த நீரை பருகினால் முப்பிறப்பின் விலாசம் உணரலாம்
எந்த நாளிலும் எந்த நேரத்திலும் சுரந்துவரும் புனித நீராகும்

5. மூன்று சிறுமிகள் :
அரட்டன் செட்டியின் இரு புதல்விகள் மற்றும் ஓர் சிறுமி வந்தனர்
அரசன் மூவர்மீதும் நீர் தெளித்தான், முற்பிறவி ஞாபகம் வந்தது
அரவணைத்து காத்து வளர்த்து மணம் முடித்த கண்ணகி தாய்
வரமாக பெற்றெடுத்த மகனுக்கு மனம் முடித்த கோவலன் தாய்
சிரமம் பார்க்காமல் அடைக்கலம் கொடுத்து காத்த ஆயர் மாதிரி
( ஆயர் : இடைச்சேரி )

6. பிறவி அடைதல் மாடலன் உரைத்தல் :
மதம் கொண்ட யானையின் பிடியில் சிக்கினான் அந்தணன் ஒருவன்
வதம் செய்து யானையின் பிடியில் இருந்து காப்பாற்றினான் கோவலன்
அதன் புண்ணியம், உயிர்ப்பித்து, கோவலன் வானுலகம் சென்றான்
பதமாக அறநெறியில் வாழ்ந்தவர் கண்ணகி, கோவலன் தாயார்கள்
அரட்டன் செட்டி மனைவிக்கு இரட்டைப் புதல்விகளாக பிறந்தனர்
தரமான ஆயர்குல மாதரி அடைக்கலம் தந்து செய்த நன்மைகள்
அரவணைக் கிடந்தோன் அன்பருக்கு தவ மகளாகப் பிறந்தாள்( திருமால் )
மரபு வழியில் நன்மை தீமைக்கு ஏற்றபடி மறு பிறவி அமைகிறது

7, 8. நின் வெற்றி நீடூழி வாழ்க '' சேரனை வாழ்த்தினான் மாடலன்
உன் பெருந்தகையால் நித்திய விழா நிகழ்ச்சி நிகழ வாழ்த்தினான்
அன்று அவையில் உன்னைக் கண்ட நிமித்திகன்'' நீயே அரசன்.'' என்றான்
அன்றே அவன் வாக்கை பொய்யாக்கினாய், இளங்கோ அடிகள் ஆனாய்
இன்று நாடு போற்றும் சிலப்பதிகாரம் படைத்தாய் என்னே உன் மகிமை''.
வஞ்சிக் காண்டம் நிறைவுற்றது




**இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் நிறைவுற்றது**

கவிஞர் ந.திருக்காமு

# தியாகம்

நாம் வளர்க்கும் கால்நடைகள் நமக்கு
ஒவ்வொரு நாளுமே தியாகமே செய்கிறது!
நாய் வீட்டைக் காத்தும் நிற்கிறதே!
பசு பால் கொடுத்து நம் உயிரையும் வளர்கிறது.
சுவைமிக்க தேனை கொடுக்கும் தேனியும்
நமக்கு உதவியே செய்கிறது!
பட்டுப்பூச்சி தன் உயிரை தியாகம் செய்தே
நமக்காக பட்டு ஆடைகளை தருகிறது
தாய் தந்தையர் பல தியாகங்கள் செய்தே
பிள்ளைகளின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.
உலகில் பிறந்த ஒவ்வொரு உயிருமே
நமக்கான உணவையும் உணர்வையும் கொடுக்கிறது.
பத்து திங்கள் சுமந்து பிள்ளையை பெறும்
அன்னை தன் உயிரை பணயம் வைத்து பிரசவம் காண்கிறாள்.
நம் தேசத்திற்காக பல தியாகங்கள் செய்து
தன் இன்னுயிரை நீத்து சரித்திரத்தில் இடம் பிடித்திருக்கின்றனர்
நாமும் மற்றவர்களுக்காக சில தியாகங்களையாவது செய்து
நம் வாழ்வில் முன்னேற்றம் காண்போமாக



கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# இன்பமூட்டும் இயற்கை

உயி(ய)ர் தமிழையும்
இயற்கையன்னையின் பட்டறிவுகளையும்
குழைத்து குழைத்துக் கட்டுகையில்
உருவாகும் ஹைக்கூத் தொகுப்பு
வெள்ளைமாளிகை



நூலுக்கான அட்டைப்படத்தை
காலத்தோடு நீந்திக்
கூகுள் குளத்தில் தேடுகிறேன்
கிடைக்கவில்லை கிடைக்கவில்லை

வீசும் பாலைவான ஊதக்காற்றை
கட்டியணைத்துக் கொண்டே
வலம் வருகிறேன் பூங்காவில்

மரத்தில் கட்டியிருக்கும்
கயிற்று முடிச்சுகளை
அவிழ்க்க முயற்சிக்கும் அணில்வள்ளல்
முடிவாகும் அட்டைப்படம்

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்

# மறதின்மை

உன்னை மறக்க வேண்டும்
என்றுதான் நினைக்கிறேன்
ஆனால்
மறதியோ உன்னை
மறக்க வேண்டும்
என்பதை மட்டும்தான்
மறக்க செய்கிறது.



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# எல்லோரும் ஓர்குலம் என்றோது கிளியே!

இறப்புக்கும் பிறப்புக்கும் இடையிலான வாழ்க்கை
இதயங்களின் துடிப்பும் ஒன்றான மனிதன்
இரத்தங்களில் இல்லை வேறுபாடு
இணைந்து வாழ ஏன் தடுமாற்றம்?
சாதி ஏது மதம் ஏது
சாவு ஒன்று நினைவில் வையடா
இறந்தவனுக்கு தங்குமிடமே மண்ணறை தானடா
சேர்த்ததை எவனடா எடுத்துச் செல்வது ?
அத்துனையும் விட்டு தனியாகத்தானே சென்றிடுவாயடா.
அதனை உணர்ந்த பின்பும் பிளவுகளாகுமா?
பிரிந்து நின்றால் நாடுதான் முன்னேறுமா?
உன்னுள்தான் நிம்மதி நிலைத்து நிற்குமா?
அதை கொஞ்சம் சிந்தித்து பாரடா
ஒற்றுமையே உறுதியான ஆயுதம் தானடா
உணர்ந்து செயற்படு என்றும் நீயடா



கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# காதலர் தினம்

ரோம் பேரரசில் உண்டான தோற்றம்
ரோமம் சிலிர்க்க வைக்கும் மாற்றம்
வாலண்டைனின் விருப்பம்தன்னை
வாடா மலர் தந்து வாழ்த்து சொல்லி
வாழ்க்கையிலே வசந்தம் வரும்
வாஞ்சையான நாள்.

வாழ்த்து அட்டை பரிமாற்றந்தனில்
வாழ்த்துக்களை வாரி இறைக்க
நினைவுச்சின்னப் பரிசுகளால்
நீங்கா எண்ணப் பதிவுகளை இட
இனிப்ப மிட்டாய் பரிமாற்றங்கலில்
இன்பங்கள் இரட்டிப்பாய் ஆகி நிற்க

பார்வை பரிமாறி பாசம் காட்டியதும்
நெஞ்சம் திறந்து தஞ்சம் அடைந்ததும்
சொல்லும் காலம் கடந்தும் காத்திருந்ததும்
சொல்லா நேரம் கூட வந்து நிற்பதும்
தூக்கம் தொலைத்த இரவுகள் இன்பமானதும்
தூரம் விலகையிலே மனம் துடித்ததும்




இத்தனை இருந்தாலும்,

காதல் கொண்ட மனங்கள் எல்லாம்
காலாவதி ஆகி போனதென்ன?
இணைந்த மனங்கள் எல்லாம் இங்கே
இறுகி போய் உறவு விலகியதென்ன?
காதல் மணம் புரிந்த உள்ளங்கள் இன்று
கத்தரிக்க நீதிமன்றம் ஏறி நிற்பதென்ன?

காதலும் கடந்து போகலானது.

கவிஞர் ஆனந்த் குவை.ஜெயராமன்,சேத்தியாத்தோப்பு

# நன்னாள்

அல்லல் நிழலில் தமிழினம்
ஆறுதல் சொல்ல யாருமில்லை!
அரவணைத்து காக்க வேண்டிய அரசு
வெண்குன்றில் குதுகளிக்கிறது!
கசடு நீக்கும் கல்விச்சோலை
கயவர் கூட்டத்தின் கைகளில்
கட்டுண்டு நிற்கும் இழி நிலை!
கொடுங்கோலாட்சியை எதிர்த்து
கிளர்ந்தெழ வேண்டிய காளையர்
திரை நிழல் மயக்கம் தெளியாமல்
நீண்ட உறக்கத்தில்.
அறம் எழுந்து தீமை வீழும் நாளே
தமிழர் நிலத்தில் நன்னாள்.



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# வீரமே நீ உடைவதா?

தானே வீரமங்கையே.!
தயங்கி தற்காக்க முடியுமா ?
அகிலத்தின் முன்னே எழுவீர்.
மனிதகுல நல வாரிசாய்.

கண்ணகி என்றால் மாமதுரை பதில் கூறும்
தமயந்தி, சீதை என்று வரலாறு
கண்ணி பெருமை கொள்ளும்.

சப்ததமிழ் மொழி
கண்ணியார் இலக்கணம் கூறும்.
மனபயம் திறந்து, மடமை ஒழிக்க வந்தீர்.
மங்கையரே.

வரவேற்பிற்கு குறைவில்லை.
கண்ணிமாரே!
காலத்தின் ஓட்டத்திற்கு
கண்ணியவழி பிறந்தது உந்தனலே.

முதன்மையிலும் முன்னிலை எட்டியது உம்மவர் வீரம்.
காவியமான வாழ்வில் பெண்ணவள்
இல்லையென்றால் மண்ணவர் விரக்திதான்.

அரவணைப்பின் முதல் அன்பு வரை அவளே!
சக மனிதா!
தோழமையுடன் விழி ;
தலைவியின் வழியை,
தோழியின் நெறியை.

தேசமே பொக்கிஷமானது,
பெண்டிரும் வீரம் கொண்டீர்.
தாயகம் சிறக்க.



கவிஞர் வியாத்தன் ச.லக்ஷ்ஹரன்

# வாழ்க்கை என்றும் சொர்க்கம்

கருணை கொண்ட மனமும்
கடன் இல்லா வாழ்வும்
கல்லமில்லா அன்பும்
பகையில்லாஉறவும்
நோயில்லா உடலும்
உழைக்க தயங்காத மனமும்
புறம் பேச நட்பும்
துன்பத்திலும் துவளாத
மனம் படைத்த மனைவியும்
பொறாமை இல்லாத உள்ளமும்
புரிந்து உணர்ந்த பிள்ளைகளும்
நல்வழி காட்டும் ஆசானும்
பெரியோரை போற்றும் மனசும்
மாசற்ற அன்பும்
இனிமையான குணமும்
இவை மட்டும் அமைந்து விட்டால் !
துன்பம் என்னும் கடலை கூட
துச்சமாக தாண்டிடலாம்
சொர்க்கம் என்னும்
தூளியிலே சுகமாக ஆடிடலாம்
சொர்க்கம் நரகம்வேறில்லை
விதியை நொந்து பயனும் இல்லை
அதை அடையும் வழியும் நம்மிடமே
வாழ்க்கை என்றும் சொர்க்கமே
முறையே வாழ்ந்து பார்த்தால் அமுதமே



கவிஞர் ஜேப்பி.பன்னீர்செல்வம்,சேத்தியாதோப்பு

# தாய்மை

கருவறையின் அகன்கோதை அவள்
காதலின் வரைவிலக்கணம் அவள்

இல்லறம் காக்கும் அடிசிற்கினியாள் அவள்
தூக்கம் தொலைத்து
தொட்டிலில் சுமப்பவள் அவள்

நம் துயர்துடைக்க தன்
நலம் மறந்து பணியாற்றுபவள் அவள்

குருதிகுடித்து பிறந்த என்னை கருவறை என்ற
அரியணையில் அமர வைத்து அழகு பார்த்தவள் அவள்

ஐந்தில் அகரம் சொல்லித்தந்ததும் அவளே
உறவின் ருசி உணரச் செய்தவளும் அவளே

தட்டிக்கொடுப்பதும் அவளே
தோள் தூக்கிவிடுவதும் அவளே

அகிலத்தின் அருட்கொடையும் அவளே
அன்பின் அடையாளமும் அவளே

அவள் இன்றி இத்தரணி இயங்குமா?
இல்லை,
இத்தரணியே
அவளால் தான் இயங்குமா?




கவிஞர் அதீனா அபூ உபைதா,ஓட்டமாவடி(மட்டக்களப்பு)

# தொடரும் காற்புள்ளி

நேற்று நடந்தது நாடகமா
இன்று நடப்பதின் ஒத்திகையோ
எங்கு கடப்பது கனவினில்

கடந்தும்
தேங்கி நிற்பது நிகழ்வினில்



கனவுகளை தந்தது
கடைவழியில் மறைந்தது
காணாததை தேடியது
கடைவிழியில்

சொல்லாத வார்த்தைகளை
தொடரும் காற்புள்ளி
எங்கோ காற்றில் நமை
தொடர்ந்து கொண்டே இருக்கும்!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# காதல் நினைவுகள்

காதலின் அரிச்சுவடி தெரியாத எனக்கு
உன் அன்பால் முழுவதையும் புரிய வைத்தாயே
கண்கள் மூடினால் விழியோரம் காதலால் தூது சொல்கிறாய்
கற்பனையில் காலடி வைத்தால்
கற்பனையை காதல் வர்ணம் பூசி செல்கிறாய்

நினைவுகளால் நித்தம் நெஞ்சோரத்தில்
காதலை கவிபாடி உள்ளம்தனில் துளைத்து
உள்ளத்தையே ஊஞ்சல் ஆட வைக்கிறது
உன் அழகிய காதல் நினைவுகள்.



அருகில் நீ இல்லத என்றாலும்
அனுமதியோ உன் நினைவுக்கு மட்டுமே.
என் அருகில் நீ இருப்பதாய் ஓர் உணர்வு
தொட்டு அணைக்கையில் எல்லாம்
வெறும் கனவு என உணர்கிறேன்

தொலைத் தூரம் நீ இருந்தாலும் என் வாழ்வு முழுவதும்
உன் நினைவுகளால் நீயாகி போகிறாய் என்னவனே.

கவிஞர் நசூர்தீன் நப்ரிஸா,இலங்கை

# பெண்ணின் ஆதங்கம்

நானும் ஒரு பெண்தான்
எனது வாழ்வும் வலிகள் நிறைந்தவைதான்
வலிகளை மறைக்க வழிகளை தேடினேன்

மௌனித்து இருந்தேன்
திமிரு பிடித்தவள் என்றார்கள்
அழுது பார்த்தேன்
கோழை என்றார்கள்
கோபம் கொண்டேன்
பொறுமை இல்லாதவள் என்றார்கள்
கவலை கொண்டேன்
மீள தெரியாதவள் என்றார்கள்
மனிதர்களை விட்டு விலகி இருந்தேன்
சுயநலவாதி என்றார்கள்.



எனது ஒவ்வொரு செயலுக்கும்
பதில் கூற தெரிந்தவர்களுக்கு
என் வலிகளை புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லை
இவர்களின் செயலுக்காக நான்
கோபம் கொள்ளவில்லை மாறாக
இவர்களை நினைத்து வருத்தம் கொள்கின்றேன்.

வலிகளை மறைக்க என்னை போல போராடும்
ஒவ்வொரு பெண்களிடமும் இவர்கள்
இவ்வாறுதானே நடந்து கொள்வார்கள்
இவ்வாறு நடந்து கொள்பவர்களில் பலர்
பெண்களாக இருப்பதுதான் மிகுந்த கவலை எனக்கு.

கவிஞர் சாதீக் பாத்திமா சம்ஹா,மூதூர்(இலங்கை)

# பூக்கள் சுமக்கும் வாசம்

நினைவடுக்கில்
நிறைந்த சங்கதிகள்
ஜன்னலோர நிழலில்
இளைப்பாறில்

பேசிய கதைகள் கண்டு
விலகிய தென்றலும்
மனதெழுதிய கவிதையில்
மலர்ந்த துளிகளும்

மின்னஞ்சல் பார்வை
கடத்தலில்
மின்னிடும் புன்னகை
புதிரும்

பூக்கள் விட்டு தூதும்
முகம் மோதிய விநாடிகள்
பழைமை ஏறியும்
பசுமை நினைவுகள் பலவும்

பூத்த காதல் பூரித்த
நிமிடங்கள்
புதுமைகள் வந்தும்
துரத்தும் பசுமையின் வாசம்



கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# அற்ப ஆசை

பூரிப்புடன் திகிலாய் நின்றாய்
பூத்த மலர்களின் பூ மனம் வீசி

பறவைகள் மனதை ஏகோபித்து
சிறை பிடித்தாய்
தொட்ட கடன் தொடர் முடிக்க
பட்ட சுமை வந்து சேருமாறு

நீயும் இன்று வஞ்சிதனை
சூதுக்கொள்ள உன்னையும்
காவு கொள்ளும் என்றோ
ஒரு நாள் மறந்து விட்டாய்



பட்ட மரமாய் பரிதவிக்க
வந்து போவோர் நிழல் தின்று
கோடை காலத்தின் சீற்றம் என
நீ நினைத்து பசுமையின் கீறல் எங்கே
தெளிக்குமா என தேடுகிறாய்

வந்து போகும் காலநிலையும்
மாற்றம் தருவாயோ
அற்ப ஆசை நிதர்சனமாகும்
காலம் வரும்

கவிஞர் கணிதன் மா.சரவணன்,இலங்கை

# பாலூட்டும் தாய்மை சிறப்பு

மடிநிறை மகிழ்வில் குழுவி;
மறைத்தே உணவிடும் அருவி;
வடிவாய் வந்தநல் பிறவி;
வாழ்நிலம் தொழுதிடும் இறைவி!

உயிரைத் தன்னுள் பூட்டி,
உலகிற் (கு) உயிரைக் காட்டி,
உதிரத்தை உணவாய்க் கூட்டி,
உடல்வளர்க் கும்பா லூட்டி ,

உணவுடன் உணர்வைக் கோத்து,
உள்ளத்தில் உவகை பூத்து,
கனிவுடன் தன் உடல் சேர்த்து,
கலப்படம் இன்றிக் காத்து,



கெட்டுப்போகா உணவு!
தொற்றுகள் சேர்க்கா உணவு!
பெட்டியில் பூட்டா உணவு!
பழையது ஆகா உணவு!

தொட்டு அணைக்கும் உணர்வு,
தொப்புள் கொடிவரும் உறவு,
முட்டிக் குடிக்க வரவு,
முகத்திலும் சுரக்கும் நிறைவு!

தாய்க்கரம் வேலியில் காப்பு,
இருவிழி மூடா விழிப்பு,
தாய்மடி தூளியின் வடிப்பு,
தெய்வமும் தூங்க அழைப்பு!

கவிஞர் திருமதி.இரா.இராஜா மணி,ஈரோடு

# வேண்டாம் டாட்டூ

பச்சைக் குத்தும் கலாச்சாரம் அதிகரிக்கிறது
பல இளைஞர்களின் சரீரத்தை அழிக்கிறது

சித்திரம் தீட்ட உடல் ஒன்றும் சுவரல்ல
சிந்திப்பாயா நீ டாட்டூ என்றும் நல்லதல்ல

இயற்கையான உடல் அமைப்பை மாற்றாதே
இரசாயனம் இரத்தத்தில் கலக்க அனுமதிக்காதே

ஒரே ஊசியை உபயோகித்தால் வருகிறது தொற்று
ஒப்புக் கொள் மருத்துவரின் அறிவுரைக் கூற்று.



கவிஞர் ஜாய்ஸ் வசந்தராஜ்



அகர முதல

# கட்ட வண்டி

பள்ளிக்கூடம் போகையிலே
பாதம் ரெண்டும் வலிக்குமுன்னு
கட்டவண்டி பின்னாலே
பக்குவமா குத்தவச்சு
பாடிக்கொண்டே ஓடி வரும்
இந்த பாசக்கார அண்ணங்க.



ஒன்னொக்கொன்னு ஆதரவா
ஒத்துமையா இருந்த புள்ள
ஒருத்தன் கைபிடிச்சி
நல்லதொரு வாழ்க்கை
வாழ வழி செஞ்சாருங்க.

மருக்கொழுந்து வாசத்திலே
மச்சானின் நேசத்திலே
மருதாணி சிவக்குதுங்க
மனசும் தான் புரிஞ்சுதுங்க.

இரட்டை மாட்டு வண்டி போல
வாழ்க்கை நல்லா நடந்ததுங்க
இரண்டு பேர் அன்பிலே தான்
மனசும் இங்கே நிறைஞ்சுதுங்க.

சாமிபோட்ட முடிச்சிலே
கைபிடித்த உறவு இன்று
வீதி வழியே விட்டு போகுமுன்னு
நினைக்கலைங்க.
பாவி உசுரு மட்டும்
இன்னும் போகலைங்க.

கட்ட வண்டி கட்டிக்கிட்டு
காளை மாடு பூட்டிக்கிட்டு
கட்டு சோறும் எடுத்துக்கிட்டு
கருக்கலிலே வாராருங்க
கட்டவண்டியும் சீதனமா தாராருங்க.

ஒத்தையா தவிக்கையிலே
உடன் பிறந்த பொறப்பு மட்டும்
உறுதுணையா இருக்குதுங்க
கருப்பசாமி போலதான்
காவலுக்கு நிக்குதுங்க. .

கட்டவண்டி வேணாமுங்க
காசு பணம் வேணாமுங்க
கட்டையிலே போற வரைக்கும்
உங்க அன்பு ஒன்னு மட்டுமே போதுமுங்க.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# கண்ணாடித் துண்டாக

கோடியாய்த் தெரிகிறாய்
நீ சுக்கு நூறாய் உடைத்த
என் இதயக் கண்ணாடியில்
அதிலும் நீ அழகாய்த் தெரிகிறாய்.

உனக்காக கட்டி வைத்த
மனக்கோட்டையில்
ஏதோ ஓர் ஓரத்தில் ஒதுக்கவில்லை!
என் இதயக் கோட்டையின்
இளவரசியே நீதான்.
என்னை வெறுத்தாலும்!



காயப்பட்ட காதலின் வலி
உனக்காக காத்திருக்கும்
என் நெஞ்சாங் கூட்டு
பொக்கிஷங்கள்!

உன்னைத் திரும்ப திரும்ப
என் கண்முன் கொண்டுவரும்
அருங்காட்சி.
அதில் நீ
சிரிக்கிறாய், சிந்திக்கிறாய், சிணுங்குறாய்,
கண்களில் வழியும் காதலோடு.

கவிஞர் திருமதி மோ.கோமளாநேதாஜி

# உடைந்த கண்ணாடி

ஒற்றைக் கண்ணாடி ஒருமுகம் காட்டும்.
நானோ உடைந்து போன கண்ணாடி.
பலமுகம் காட்டும் உடைந்து போன கண்ணாடி.
கறுப்பும், வெண்மையும் கலந்த முகமொன்று.
விருப்பும், வெறுப்பும் இணைந்த முகமொன்று.
அன்பும், பண்பும் கலந்த முகமொன்று.
பாசமும், நேசமும் படர்ந்த முகமொன்று.
கோபமும், சோகமும் சூழ்ந்த முகமொன்று.
காமமும், தாபமும் இணைந்த முகமொன்று.
நாணமும், நலினமும் நிறைந்த முகமொன்று.
அச்சமும், இச்சையும் இருக்கும் முகமொன்று.
கவலையும், கருணையும் கலந்த முகமொன்று.
பக்தியும், பயமும் இருக்கும் முகமொன்று.
தவிப்பும், சலிப்பும் இருக்கும் முகமொன்று.
துக்கமும், வெட்கமும் விளைந்த முகமொன்று.
விரக்தியும், எரிச்சலும் ஏறிய முகமொன்று.
போட்டியும், பொறாமையும் குடியான முகமொன்று.
மனவழுத்தம், மனக்கலக்கம் நிறைந்த முகமொன்று
நம்பிக்கையும் அவநம்பிக்கையும் அடைந்த முகமொன்று.
எதிர்பார்ப்பு ம், ஏமாற்றமும் கிடைத்த முகமொன்று.
அமைதியும், தனிமையும் தேடும் முகமொன்று.
இத்தனை முகங்களும் அக மனதிடையே.
அத்தனை முகங்களும் அடைகளம் புகுந்தது மனிதரிலே.



கவிஞர் கோ. தனுசன்,மட்டக்களப்பு(இலங்கை)

# சூழல் சில நேரம்

நாமே முடிவெடுக்காத
தருணங்கள்
நம்மை சிந்திக்க
விடுவதில்லை
நாம் சிந்தித்த விஷயங்கள்
நம்மை செயல்பட
வைப்பதில்லை.
ஏனோ வாழ்க்கை
பம்பரமாய்
சுத்தினாலும்.
பரமபதமாய் போகிறது.
சிந்தையில் ஆயிரம்
கேள்விகள்
விடை தேடி அலைபாயும்
நதியாய் மனம்
மௌன கடலில் மிதக்கும்
அலையாய்.



கவிஞர் வ.சு.கலைவாணி,நெய்வேலி

# எதிர்க்கும் மடவார்

வாரணம் குறை நடை பழகிட
பரியோ தாவி ஓடிட
சூரன் விளையாடும்
போர்க்களமோ நிசப்தமாய்.

பூஞ்சோலை இராகம் செவியோடு
கானமிசைக்க.
நுதல் வறுடும் சிகை கூசி
தென்றல் நுகர.

மௌவல் மணமோ
நாசி நுழைந்திட
குறி தவிரிய தலைவன்
முகிலிடை பரிதிக்கீற்றில்
சிங்காரமாய் மினுக்க.

விடுதி தொலைத்து களித்திட்ட
தருணத்தில் கூரிய வாள்
கீறிடும் சப்தம்.
பட்டென விழித்த விழியெதிரே

கூர் புருவத்தின் மையலில்
அஞ்சா திலகம் நிறைத்து
எதிர்த்த விழியோடு
முறைத்த பார்வையில்
தாரணி தாயவள் வணங்கியே

எஃகு ஏந்தி எழிலாய்
எதிர்க்கும் மடவார்
கோ நிலை யாதோ!




கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# மாலவனும் வைணவமும் பகுதி 21

## பெரியாழ்வார் தொடர்ச்சி 4

பிரபந்தம் முதலாயிரம் முதலைந்து திருமொழிகள்
பெரியாழ்வார் வட்டிப்பே! முதலிரண்டு மூன்றுநான்கு
ஐந்தெனவே பத்துக்கள் யாத்திட்டார்! முதல்பத்தில்
நான்கான திருமொழிதான் அம்புலிதன் பருவம்தான்
நிலவதனை அழைப்பதாகும்! கலிநிலைத்துறை சார்பதுவே!
பத்தமைத்தார் பாங்காக! மோகனத்தில் அடதாளம்
இசைத்திடவே இன்பமதாம்! ஐந்தாவது திருமொழியில்
பதினொன்றும் எண்சீர்கொள் கழிநெடிலடி ஆசிரிய
விருத்தமதே! முகாரிப்பேர் ராகத்தில் ஆதிதாளம்
நல்லினிமை சேர்த்திடுமே! ஆறாவது திருமொழி
சப்பாணிப் பருவமான கைகொட்டி ஆடலாகும்!
பதினொன்றில் பத்தமையும் வெண்டளையால் கலித்தாழிசை
ஈற்றொன்று தரவுகொச்சகக் கலிப்பாவே! யமுனாகல்
யாணிராகம் ஆதிதாளம் மகிழ்வூட்டும்! ஏழாவது
திருமொழியோ சார்நடை நடத்தலெனும் பருவமதே!
பனிரெண்டும் அறுசீர்கொள் கழிநெடிலடி ஆசிரிய
விருத்தமாகும்! அடாணாவில் ஆதிதாளம் களிப்பூட்டும்!
எட்டாவது திருமொழியோ அச்சோப்பேர் பருவமான
அணைத்துக் கொள்நீயென அழைத்திடலே! பதினொன்றும்
கலித்தாழிசை! தேசீய ராகத்தில் ஆதிதாளம்
மிகுமகிழ்வே! ஒன்பதாவது திருமொழியோ முதுகணைத்துக்
கொளவேண்டலே! பத்தமைவு வெண்டளையின் கலித்தாழிசை
ஈற்றொன்று தரவுகொச்சகக் கலிப்பாவே! உசேனிராக
ரூபகந்தான் பாவினிமை பயந்திடுமே! பத்துக்கு
ஒன்றுகுறைவு! ஒன்பதளவே! பெரியாழ்வார் தொடர்ந்திடுமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# நிழல் நிஜமாகுமா?

நிழலே! நானின்றி நீயில்லை
ஆனால், நீயின்றி நானுண்டு!
என்மேல் ஒளிவீழ்கையில்
உருப்பெறுகிறாய் நீ!
உள்ளத்தனையது என்னுயர்வு!
ஒளியைப் பொருத்ததே
உன்னுயரமும் திசையும்!
ஒளியில்லாத நேரத்தில்
ஒளிந்து கொள்ளும் நீ
அற்ற குளத்தின்
அறுநீர்ப் பறவையோ?



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# உலகை விழுங்கிய பனித்துளிக்கு பருத்த உடல்

பனித்துளியில் விழுந்த
உலகிற்கு பருத்த உடல்
வளைந்து நெழிந்த பனித்துளியின்
உடலெங்கும் தென்றலின் ரேகைகள்

ஒரு செடியை ஊடுருவி
பச்சையத்துடன் புணரும் பனித்துளியின்
ஆசுவாசக் காதலைத்தான்
நத்தை நகர்வில் கலைத்துவிட்டு செல்கிறது
ரேகைகள் கடுமையாய் பதித்த தென்றலின் விரல்கள்

தென்றலின் கரங்களுங்கு
காதல் மலர்ந்தாலும் காமம் மலர்ந்தாலும்
நத்தையோடுகளை கீழிறக்கவில்லை
ஆசையைத் துறந்த புத்தன் சாயலான பனித்துளி.



ஆயிரம் புத்தனை விழுங்கியும்
ஒற்றை ஆசையும் இல்லாமல் இழக்கிறது
பருத்து பருத்து உடைந்து போகும்
பனித்துளியில் விழுந்த பருத்த உடலில் உலகொன்று.

நீரோ நிலமோ ஆகாயமோ நெருப்போ காற்றோ
உடலை விழிங்கிய பனித்துளிக்கோ
ஐநிலத்தில் பருத்துப்போனதுடல்.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# நெருடல்

நான் என்பது
அன்றும் இன்றும்
ஒரே நானல்ல.

மரப்பாச்சி பொம்மையொன்றின்
விரலொன்று
உடைந்து விட்டதற்காக
அழுது புரண்டு
புலம்பித் தீர்த்த நான்.



யாரோ ஒருவன்
தெருநாயின் காலை
காயப்படுத்தியதால்
அன்று முழுவதும்
உண்ண மனமின்றி
சுருண்டு கிடந்த நான்.

கசாப்புக் கடை
நடத்தும் மனிதரை
ஈவு இரக்கமற்ற
விலங்காய் நினைத்து
அன்றெல்லாம்
மனம் வருந்திய நான்.

சமூக நீதியின்
அலறல் சத்தங்களை
கண்டும் காணாமலும்
கடந்து செல்கின்றேன்
வேறுவழியின்றி
இன்று நான்.

கடவுள்
தண்டிப்பாரென்ற
போலி சமாதானத்தை
ஏற்றுக் கொண்டு
நகர்ந்து சென்றிட
பழகிவிட்டேன் இன்று.

நான் என்பது
அன்றும் இன்றும்
ஒரே நானல்ல.

கவிஞர் இளங்கோவன் மணியன்

# ஐயப்பன் காளை

களம் தான் இவன் உயிர்
இறுதி வரை மண்ணின் பயிர்
இவன் இல்லை எனில் காளையின்
வலி வழி நிலை அறிய எதிர்
எங்கள் ஊரின் அடையாளக் கதிர்
இவனே களத்தின் துளிர்.
சொல்ல முடியுமா விடியலை
இவன் காலம்தான் காளையில்
துடியலை தூக்கி வீசி.
இன்னுயிர் மன்னுயிர்க்கு
இவனே என் ஊரின் நிகருக்கு.
ஆடிப்பார்ப்போம் ஆட்டமல்ல
என் அண்ணன் காளையின் நாட்டம்.
நடக்குமா நாளைய விழாவில்
யார் விலாங்கு மீன் என்று.
மோதிப்பார் என் உயிர் அல்ல
என் உயிரின் உயிர்க்கு முன்.
திமிர் பிடித்த என் திமிலை பிடிக்க
நிகர் எவனடா.
இது நூத்தப்பூரின் மகிமையடா
அதுவே ஐயப்பன் உடமையடா.



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -22

## ஊருக்குப் போவதற்கு டிக்கெட்



"புவனா நான் சிவா பேசுகிறேன்" , "சொல்லுங்க அத்தான்"
"திவ்யா என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாள்?","தூங்குகிறாள்"
"உனக்கு ஊருக்குப் போவதற்கு டிக்கெட் கிடைத்து விட்டது", "ரயில் எப்போது?"
"சயங்காலம் ஏழு ஐம்பதுக்கு தாதரிலிருந்து புறப்படுகிறது."
"நீங்கள் வந்து என்னைக் கூட்டிக் கொண்டு போவீர்களல்லவா?"
"இல்லை எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறது. நான் நேரடியாக ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து விடுகிறேன்."
"திவ்யா", "அவளை எதிர் வீட்டு டீச்சர் வீட்டிலே விட்டு விட்டு வந்து விடு. துணிமணி எல்லாம் எடுக்க வேண்டும் என்றாயே. எடுத்து விட்டாயா?"
"அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை.", "ஊருக்குப் போவது என்று முடிவு பண்ணி விட்டாய். அப்படித்தானே?"
"எல்லாவற்றிற்கும் நீங்கள் தான் காரணம்"
"நானா? புவனா என்ன சொல்கிறாய்?"
"அத்தான் நான் ஊருக்குப் போவதற்கு டிக்கெட் எடுத்தது நீங்கள் தான். திவ்யாவிடம் நான் இல்லாமல் தனியாக பள்ளிக்குப் போவதற்கு தயார் செய்து கொள்ளச் சொன்னது நீங்கள்தான்."
இதையெல்லாம் விட மிக வருத்தம் தந்த விஷயம் நீங்கள் என்றைக்காவது திவ்யாவிடம் என்னை நோக்கி அம்மா என்று கூப்பிடச் சொல்லியிருப்பீர்களா? எப்போதுமே அவளிடம் 'அத்தா' என்றுதான் சொன்னீர்கள். நான் புதிதாக வந்தவள். அவள் எவ்வளவு தான் என்னோடு ஒட்டினாலும் உங்களோடு பாசமாக இருந்தவள்."
நீங்கள் என்ன சொல்லியிருந்தாலும் கேட்கும் நிலையிலிருக்கிறாள். அவளிடம் கனிவாக புவனா 'அத்தா'தான் இனி உனக்கு அம்மா... அவளை அம்மா என்று கூப்பிடு என்று சொல்லியிருந்தால் கண்டிப்பாக அவள் உணர்ந்திருப்பாள்.
என்னைப் பொறுத்தவரைக்கும் அவள் என்னை அம்மா என்று கூப்பிட வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு விருப்பமில்லை என்கிற போது நான் இங்கே இருப்பதில் அர்த்தமில்லை என்று தான்தோன்றுகிறது."

இரஜகை நிலவன்

அத்தியாயம் -22

ஊருக்குப் போவதற்கு டிக்கெட்

"சரி இவ்வளவு பெரிய பழியை என் மேல் தூக்கிப் போடுகிறாயே! என்றாவது ஒரு நாள் அத்தான் திவ்யாவிடம் என்னை அம்மா என்று கூப்பிடச் சொல்லுங்கள் என்று நீ சொல்லியிருக்கலாமே"

"இதெல்லாம் நீங்களாக அடி மனதிலிருந்து எழும் விருப்பத்தில் செய்ய வேண்டியது. இதை நான் சொல்ல வேண்டியதில்லை."

"சரி தப்புதான் அதற்காக..", "அத்தான் நான் புறப்பட்டாகி விட்டது. சாயங்காலம் ஸ்டேஷனில் பார்ப்போம். எந்த பெட்டியில் என் இருக்கை நம்பர் என்ன என்று சொன்னால், நீங்கள் வருமுன் நான் ரயிலில் போய் அமர்ந்து விடுவேன். நீங்கள் வந்து டிக்கெட்டைத் தந்து விட்டுப்போகலாம்."

"முடிவு பண்ணிவிட்டாய், பரவாயில்லை. டாக்ஸி பிடித்து நேரே தாதர் ஸ்டேஷன் வந்து விடு அதிகமாக யாரிடமும் பேச்சுக் கொடுக்காதே. உனக்கு இந்தித் தெரியாது என்று மற்றவர்களுக்குத் தெரிந்தால் பிரச்சனையாகி விடும்."

"சரி"

"நான் ரயில் நிலையத்திற்கு வரும்போது நான்கைந்து சேலைகள் எடுத்துக் கொண்டு வருகிறேன். மிட்டாய் ஏதாவது வாங்க வேண்டுமா?"

"உங்களுக்கு என்னத் தோன்றுகிறதோ வாங்கி வாருங்கள்."

""ஏன் இப்படியாக பேசுகிறாய்?", "விரக்தி எல்லாம் ஒன்றுமில்லை."

"சரி. சாயங்காலம் பார்க்கலாம். பெட்டி எண், இருக்கை எண் சொல்லுகிறேன் எழுதிக் கொள்."

"சொல்லுங்கள் நினைவில் வைத்துக் கொள்கிறேன்." என்றாவாறு கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் புவனா.



தொடரும்...

இரஜகை நிலவன்

# தோடுடைய செவியள்

## நூல் வாசிப்பு

ஜி.சிவக்குமார்
கவிதைகள்
முதல் பதிப்பு டிசம்பர் 2023
பக்கம் 100
விலை ரூ 120
வெளியீடு பொள்ளாச்சி இலக்கிய வட்டம்


புல்லாங்குழல்களைச் சுவைக்கும் யானை, ஆத்மாநாமின் கடவுள் என்ற இரு கவிதைத் தொகுப்புகள் மற்றும் வெம்புகரி என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்ட கவிஞரின் நான்காவது நூல் இது. வாசிக்க எளிமையும் நினைவில் சட்டென ஒட்டிக்கொள்வதுமான குறுங்கவிதைகளில் தனது சிந்தைகளின் விதைகளைத் தூவியிருக்கிறார்.

தான் கண்ணுறும் காட்சிகளில் சிந்தனைகளைக் கூட்டி கவிதையாக்கி காட்சிப்படுத்துவதில் ஓவியராகவும் காட்சிகளின் வழியே நம்மை சிந்தனைக்குள் உலவவிடுவதில் நடத்துநராகவும் கவிதைகளின் வரிகளுக்குள் நமக்கான வெளிகளை அமைப்பதில் சக பயணியாகவும் கவிஞர் தோடுடைய செவியள் மூலம் புதிய பரிமாணமெடுக்கிறார்.

ஒரே தலைப்பின்கீழ் தோன்றும் பல்வேறு வகையான கலவையான எண்ணங்களை ஒருங்கமைத்து குறுங்கவிதைகளாக்கி சட்டென மனதிற்குள் ஒட்டிக்கொள்ளும்படியான வரிகளில் இளைப்பாறுகிறார். வாசிப்பதில் வேகமும் அடுத்து என்ன என்ற அவசர மனநிலையும் இன்றைய காலகட்டத்தில் வாசிப்போருக்கான காலத்தை சுருக்கிவிடுகின்றன.

@
குருதி தோய்ந்த சவுக்கை மடக்கியபடி குருதியைத் துடைக்காமல்
தேருக்கு வழி விடுகிறான்
குருதி விற்றுப் பிழைக்க விதிக்கப்பட்டவன்

@
தேரிலிருக்கும் சாமி தெரியவில்லையென
யாருக்கும் புகார்களில்லை
அனைவருக்கும் தெரியும்
இன்றைக்குத் தேர்தான் சாமி
@
தன்னைப் பார்க்க மட்டுமே
எல்லோரும் வருவதில்லை என்பதைத்
தேரும் அறியும் அழகரும் அறிவார்




இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# தோடுடைய செவியன்



## நூல் வாசிப்பு

திருவிழாக்கள் தரும் கொண்டாட்ட மனநிலையை, நண்பர்களின் சந்திப்புகளில் பெருக்கெடுக்கும் உற்சாகத்தை, இயற்கையை ரசிப்பதில் நமக்குள் உருவாகும் பேரின்ப நிலையை, யானையின் அழகில் மயங்கித் தவிக்கும் வனவாசியின் தாய்மை நிலையை, காதலையும் அதன் சொல்லித் தீரா இன்பக் கனவுகளையும் காமத்தின் முடிவுறாப் பக்கங்களை நமக்குள் எழுதிச் செல்லும் ஆசையின் வளர்தலையும் கவிதைகளின் கைபிடித்து வாசித்துக் காட்டியும் நம்மை நமக்குள் உணர்த்திக் காட்டியும் படமாக்கும் கவிதைகள் இந்நூலை அழகு செய்கின்றன.

போ
கடலில் உன் பாதங்களை நனை
குடிநீராகட்டும் கடல் நீர்

உன் காதாறுமாதம்
அடகுக் கடையாறு மாதம்
ஒரு தோட்டின் சரிதம்

தேங்கிய நீரில் மெல்ல ஊர்கின்றன மனிதாபிமானமுள்ள
நான்கு சக்கரங்கள்


கண்மாயின் அத்தனை ரகசியங்களையும்
வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது
கோடை

நினைவுகளில் மட்டுமே
விடிய விடிய
பலகாரம் சுடுகிறார்கள் அம்மாக்கள்

முத்தமிடும் ஓசை
அது
காதுகளசைய பின்னே வரும்
காமத்தின் மணியோசை

குயிலின் பாடல்களில்
இருக்க இடமற்றவனின்
வலி

முத்தமென்பது
அழகானதொரு
சமாதானக் கொடி




இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# தோடுடைய செவியள்


## நூல் வாசிப்பு

தளர்வுகள் பட்டியலை
ஆவலோடு பார்க்கிறார்
சலித்துப் போன கடவுள்

நூலில் இடம்பெறும் இக்கவிதைகள் பல்வேறு காலகட்டங்களின் பல்வேறு நிலைகளின் வழியே நிகழ்வுகளையும் அவற்றின் போக்கினால் மனதினில் எழுந்திடும் உணர்வுகளையும் அறியத் வருகின்றன.

தனது இரு வாரிசுகளின் கர்ப்ப காலத்தின் நிகழ்வுகளையும் அந்த வேளையில் தான் தகப்பனாக தன்னை உணர்ந்த இன்பத் தருணங்களின் அனுபவங்களையும் ஒவ்வொரு தகப்பனின் வழியாக கவிதையாக்கியிருக்கும் நூலின் ஆசிரியர் பிள்ளைகளின் மீதான பாசத்தை நேசத்தை மட்டுமல்ல அவர்களை வளர்ப்பதில் அவர்களுக்கு வழிகாட்டுவதில் பெற்றோரின் கடமைகளைச் சொல்லிச் செல்கிறார் அதன்வழியே தனது குழந்தைகளுக்கும் பெற்றோரின் அருமையை அவர்களது உழைப்பின் உணர்வுகளை சக உயிர்களின் மீதான கருணையை உணர வைக்கிறார்.

கர்ப்பத்தில் காத்திருக்கும்
உன் அசைவுகளை
மேடிட்ட வயிற்றில்
மென்மையாய் அழுந்தியிருக்கும்
என் கரங்களின் வழி
உணர்ந்து சிலிர்க்கிறேன்
என் செல்லமே
நீ உணர்கிறாயா
தவிப்புடன் காத்திருக்கும்
உன் தகப்பனின் ஸ்பரிசத்தை




பிரசவ அறையினுள்
உயிர் தெறிக்கும் உன் வேதனைக்குப் பெயர் உண்டு
அறைக்கு வெளியே
சொட்டுச் சொட்டாய்
உயிர் உருகி வழியத் தவிக்கும்
என் அவஸ்தைக்குப் பெயர் உண்டா.

நல்லதொரு கலைத் திரைப்படத்தில் நம்மை நாமே மறந்து அனுபவத்தை நமக்குள் கடத்திக் கொண்டு உற்சாகத்தில் திளைத்திருக்கும் மனநிலையை விதைக்கிறது இத்தொகுப்பு. தோடுடைய செவியள் வாசிப்போரின் மனதில் நினைவுகளை ஊஞ்சலாட்டும்.

இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# தமிழறிஞர் சாமி.சிதம்பரனார்

01.12.1900 - 17.01.1961

கட்டுரை

## சிறப்பு



தமிழறிஞர் சாமி.சிதம்பரனார் அவர்கள் தமிழகத்தில் முதன்முறையாக பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர். தமிழ் மரபில் முதல் கலப்பு மணம் செய்தவர், முதல் விதவை மறுமணம் செய்தவர், முதல் சுயமரியாதை மணம் புரிந்தவர், முதன்முதலாக மேலைநாட்டு உடையில் தமிழ் பயிற்றுவித்த தலைமைத் தமிழாசிரியர் எனப் பல்வேறுபட்ட முதலுக்குச் சொந்தக்காரர் தமிழறிஞர் சாமி.சிதம்பரனார்.

## பிறப்பு - படிப்பு

மிகச் சிறந்த தமிழ்த் தொண்டரான சாமி சிதம்பரனார். தஞ்சை மாவட்டம், சிறுகடகம் என்ற ஊரில், சாமிநாத மலையமான் கமலம்மாள் எனும் தம்பதியருக்கு நன்மகனாக 1-12-1900ல் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் சிதம்பர மலையமான் என்பது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படித்து பண்டிதர் பட்டம் பெற்றார். 1924 முதல் 1940 வரை அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். பள்ளி மாணவர்களுக்குப் பல பாடநூல்கள் எழுதினார்.

இவர் பகுத்தறிவுக் கொள்கை கடைப்பிடித்து வாழ்ந்து வந்தார். இவர் தன் முப்பது வயதுக்குப் பிறகு சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். அதன் பிறகு வேறு சாதியைச் சேர்ந்த பெண்ணான சிவகாமி அம்மாள் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அக்காலத்தில் சாதிக்கலப்புத்திருமணம் செய்ய மிகவும் துணிவு வேண்டும்.

அ வில்சன்,இதழாசிரியர்

## பணிகள்

1936ல் 'அறிவுக் கொடி' என்ற பத்திரிகையை அவர் நடத்தினார். அதற்கு சிவகாமி அம்மாவே ஆசிரியராக இருந்து அனைத்து பொறுப்புகளையும் கவனித்து வந்தார்.

இவர் ஆசிரியர் பணிபுரிந்து கொண்டே சென்னையிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளுக்குக் கதைகள், கட்டுரைகள் எழுதி வந்தார்.

இவர் 1938ல் சென்னைக்கு வந்தார். சிங்கப்பூரிலிருந்து வரும் தமிழ்ப் பத்திரிகை சிங்கப்பூர் தமிழ் முரசில் தொடர்ந்து பன்னிரெண்டு ஆண்டுகளாகத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழ்ப் பத்திரிகைகளுக்குக் கதைகள், கட்டுரைகள் எழுதி வந்தார்.

தன் மனைவி சிவகாமி அம்மாவை ஆசிரியராக நியமித்து அறிவுக்கொடி என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.

## நூல்கள்

அறிவுக்கொடி, பகுத்தறிவு, வெற்றி முரசு, புதுவை முரசு, குடியரசு, தமிழ்நாடு, திராவிட நாடு போன்ற பல பத்திரிகைகளில் சேர்ந்து பணியாற்றி அனுபவம் பெற்ற இவர், பேரறிஞர் அண்ணா ஆசிரியராக இருந்து வந்த விடுதலை பத்திரிகையில் துணை ஆசிரியராக 1940ல் பணியில் சேர்ந்தார். ஓராண்டு பணியாற்றிய பின்னர் கும்பகோணம் சென்று 'முன்னேற்றம் பிரஸ்' எனும் அச்சகம் நடத்தினார். சிறிது காலம் நடத்தி மீண்டும் சென்னைக்கே சென்று 'லோகோபகாரி' பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். 1951 வரைபணியாற்றினார். பின்னர் தனியாக நூல்கள் எழுதி வெளியிடத் தொடங்கினார்.

அ வில்சன்,இதழாசிரியர்

## நூல்கள்

இவர் சங்ககாலத்து தமிழ் நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்கணக்கு, தொல்காப்பியம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற இலக்கியங்களை நன்கு ஆய்வு செய்து அந்நூல்களை எளிய மக்களும் பாமரர்களும் தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் மிகவும் எளிமைப்படுத்திப் பல நூல்களாக எழுதி வெளியிட்டார். அதனால் சங்ககால நூல்களையும் காப்பியங்களையும் தமிழ் மக்கள் பலரும் அறிந்து பயிலும் வண்ணம் தொண்டு செய்தார். பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை 'தமிழர் தலைவர்' என்ற நூலாக எழுதி வெளியிட்டுத் தமிழக மக்கள் அறியும் வகையில் வெளியிட்டார்.




## இறப்பு:

பைந்தமிழ்ச் செல்வர், சீர்திருத்தச் செம்மல் என்று மக்களால் போற்றப்பட்டவரும், ஐம்பது நூல்களுக்கு மேலாக எழுதித் தமிழ்த் தொண்டாற்றியவருமான, சாமி சிதம்பரனார், 17-1-1961 ஆம் நாளில் இயற்கை எய்தினார்.

அ வில்சன்,இதழாசிரியர்

# நாளை நமதே

எந்த ஒரு செயலையும்
ஆர்வம் குறையாமல்
நம்பிக்கையுடன் ஆரம்பியுங்கள்.
வெற்றி தானாகவே நம்மை தேடி வரும்.

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com